KAALAI KATHIR 03 JUNE 09

# ஈஷா யோகா மையம் விளையாட்டு போட்டி

**கோபிசெட்டிபாளையம்:** ஈஷா யோகா மையம் மற்றும் கிராம புத்துணர்வு இயக்கத்தின் சார்பில் 2009 ம் ஆண்டுக்கான புத்துணர்வு விளையாட்டு போட்டிகள் கோபி பெரியார் மைதானத்தில் நடந்தது.

போட்டிகளை கோபி ஆர்.டி.ஓ., மகேஸ்வரன், போலீஸ் டி.எஸ்.பி., சுப்ரமணியம் மற்றும் மைராடா செயல் திட்ட இயக்குநர் அழகேசன் ஆகியோர் துவக்கி வைத்தனர். போட்டியில் கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த 147 அணிகள் கலந்து கொண்டன. கிராம புத்துணர்வு போட்டிக்கான இறுதி போட்டியில் சூரியம்பாளையம் அணியும், பெண்களுக்கான எறி பந்து போட்டியில் முருகன்புதூர் அணியும், வாலிபால் இறுதி போட்டியில் அக்கரை கொடிவேரி அணியும் வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கு எல்.ஐ.சி., வளர்ச்சி அதிகாரி பச்சையப்பன், சாரதா மெட்ரிக் பள்ளி செயலாளர் சீதாலட்சுமி ஆகியோர் பரிசு வழங்கினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஈஷா யோகா மைய அமைப்பாளர் சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர். அந்தியூர் ஸ்ரீ ஆஞ்சநேயா சிலம்பு கூட குழுவினரின் சிலம்பாட்டம், கலைவாணர் குழுவினரின் இசையாட்டம் மற்றும் கோவை செம்மேடு ஈஷா சிறுவர்களின் ஒயிலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடந்தது.